**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 39/2020**

| | | DEPOSITION OF WITNESS | DW.2 |
|---|---|---|---|
| NAME | பன்னீர்செல்வம் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 28.01.2026.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை யார் சொல்லி தயார் செய்தோம் என்றால் வக்கீல் சொல்லி தயார் செய்தோம். லதா எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என தெரியும். இந்த வழக்கில் நான் பதில் போட்டுள்ளேன். பதிலில் என்ன போட்டுள்ளது என விவரம் தெரியும். பதிலில் நான் கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன்.

2. என் பெயர் பன்னீர் செல்வம் என்றாலும் சுப்பிரமணி இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பதிலுரையில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் சுப்பிரமணியுடையது. அதில் என்ன விவரம் உள்ளது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்ன சர்வே எண்ணுக்காக வழக்கு போட்டுள்ளார் என தெரியுமா என்றால் 1154/1. சொத்தின் அளவு தெரியுமா என்றால் தெரியாது. என்ன செக்குபந்தி சொல்லியுள்ளார் என தெரியாது.

3. வாதி லதா மற்றும் அவரது கணவர் மற்றும் அவரது மாமனார் சுமார் 50 ஆண்டுகளாக அங்கு தான் உள்ளார்கள் என்றால் சரிதான் அது பூர்வீக சொத்து. அவர்கள் மனை போட்டு மூன்றாம் நபர்களுக்கு கொடுத்தார்கள் என்றாலும் மற்றதை நிறுத்தி கொண்டார்கள் என்றால் சரிதான். அவர்களது வீடு அதே தெருவில் உள்ளது என்றால் சரிதான். நானும் அதே தெருவில் உள்ளேன் என்றால் சரிதான்.

4. நானும் முனிரத்தினமும் வாதியிடமும் வாதியின் கணவரிடமும் பிரச்சினை செய்வதாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அப்போது போலிசார் அவர்களிடம் பிரச்சினை செய்யக்கூடாது என எழுதி வாங்கினார்கள் என்றால் சரிதான். இப்போது அந்த தெருவில்

நகராட்சி சாலை அமைத்து காவாய் கட்டியுள்ளதா என்றால் கட்டியுள்ளது ஆனால் வாதி காவா கட்டக்கூடாது என ஆட்சேபனை செய்தார். வாதி அவருடைய இடத்தில் காவா கட்டக்கூடாது என ஆட்சேபனை செய்தார் என்றால் சரிதான், அவருடைய இடத்தில் தண்ணீர் விடக்கூடாது என ஆட்சேபனை செய்தார் நாங்கள் எங்களுக்கு பாத்தியம் உள்ளது என ஆவணம் தாக்கல் செய்துள்ளோம். எங்களுக்கு தெருவில் போகவர பிரச்சினை இல்லை என்றால் தற்போது வரை இல்லை.

5. தற்போது நகராட்சி சார்பில் காவா கட்டியுள்ளார்கள் என்றாலும் தண்ணீர் போகவில்லை என்றால் சரிதான். எங்களுக்கு சாலையும் காவாயும் வந்துவிட்டதால் தாவாவில் வாதி கோரியபடி நாங்கள் பிரச்சினை செய்யப்போவதில்லை என்றால் அதனால் தாவாப்படி தீர்ப்பாக ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். (சாட்சி தற்போது தண்ணீர் ரோட்டுக்கு வருகிறது அந்தபக்கம் போக வேண்டும் என சொல்கிறார்). தண்ணீர் அவ்வாறு போக வேண்டும் என்றால் நகராட்சியை அணுகி நகராட்சியிடம் தான் தீர்வு காண வேண்டும் என்றால் சரிதான். முதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றாலும் அதனால் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.